[1984 மார்ச் 29

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கை அவை முன் வைக்கப்படாத நிலை இருக்குமானால், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தம்மிடம் உள்ள அறிக்கையை முழுவதும் படித்துவிட லாம். (குறுக்கீடு).

திரு. ரா உமாநாத்: பிரியர் பெர்மிஷன் என்று சொல்லி இருந்தால், பிரச்சினை வந்திருக்காது. இப்போது நிலைமை என்ன என்றால், Paper is not laid on the table of the House. அவையினுடைய மரியாதையைக் காப்பாற்றுவதற்கு, அவையில் அறிக்கை வைக்கப் பெறாததால், இதை ஒத்திவைத்தால்தான் நல்லது. (குறுக்கீடு).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அறிக்கை சிறியதாக இருந்தால் அமைச்சர் அவர்கள் படித்துவிடலாம். (குறுக்கீடு).

(முற்பகல் 10-10)

திரு. ரா. உமாநாத்: தலைவர் அவர்களே, லோக் சபா விலே உங்களுக்குத் தெரியும். கால் அட்டென்ஷனுக்கான ஸ்டேட் மெண்ட்டை ½ மணி முன்னதாக ஹவுசிலே வைக்க வேண்டும் என்று இருக்கிறது. நம்முடைய அவையிலே பிராக்டீஸ்ஸிலே இருப் பது என்னவென்றால், சபை கூடுவதற்கு முன்னாலேயே, நாங்கள் இங்கே வரும்போதே அந்த அறிக்கை ரெடியாக இருக்கும். நாங் கள் அவை ஆரம்பிப்பதற்கு முன்னாலேயே அதை படித்து விடு வோம். ஆகவே, இது மாதிரி ஒரு பிராக்டீஸ் நல்லதல்ல......

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நமது விதிமுறைகளில் அவ்வாறு இல்லை. அறிக்கை ஒரு பக்கத்திற்கு மேல் இருந்தால் தான் அவையில் வைப்பது வழக்கம். அதற்கு மேல் போக வில்லையென்றால், படிப்பதுதான் வழக்கம். அவையில் வைப்பது இல்லை. ஆயினும் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டுக் கொண்டதற்கு இணங்க, இந்த கவன ஈர்ப்புத் தீர்மானத்தை சனிக்கிழமையன்று எடுத்துக் கொள்ளலாம்.

4. அரசினர் சட்டமுன்வடிவு.

கடன் நிவாரண (திருத்த) சட்டமுன் வடிவு 1984.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

''தமிழ்நாடு 1984 ஆம் ஆண்டு கடன் நிவாரண (திருத்த) சட்டமுன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்''.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறை வேற்றப் பெற்று, அனுமதி வழங்கப்பெற்றது.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: இச்சட்ட முன் வடிவை பேரவை முன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இச்சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப்பெற்றிருக்கிறது.

5. வரவு-செலவுத் திட்டம், 1984-85 வாக்கெடுப்பு.

[அ] கோரிக்கை எண் 15-காவல்துறை.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்.

''மானியக் கோரிக்கை எண். 15 காவல் துறை என்ற தலைப்பின் கீழ் ரூ. 86,35,48,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெறவேண்டும்.''

திரு. சு. பாலன் : தலைவர் அவர்களே, தற்போதுள்ள சென்னை காவல், தொலைபேசி இணைப்பகம் எண். 83011 ஏற்படுத்தியது பழமையாதலால் சில சமயங்களில் சரிவர இயங்காததால் அதனை புதிய அமைப்பாக மாற்றியும், ஒவ்வொரு காவல் நிலையத்திற்கும் தனி நம்பர் உள்ள தொலைபேசி அமைக்க நடவடிக்கை எடுக்காதது'' என்பது பற்றி விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்.

''மானியக் கோரிக்கை எண். 15—காவல் துறை என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 86,35,48,000-இல் ரூ. 100 குறைக்க வேண்டும்.''

திரு. ரா. கிருஷ்ணன்: தலைவர் அவர்களே, காவல் நிலைய லாக்கப்பில் மரணங்கள் சம்பவிப்பதைத் தடுக்காமலிருப்பது பற்றி விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

''மானியக் கோரிக்கை எண் 15—காவல் துறை என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 86,35,48,000-இல் ரூ. 100 குறைக்க வேண்டும்.''

திரு. பொ. உத்திராபதி: தலைவர் அவர்களே, தஞ்சை மாவட்டம் திருத்துறைப்பூண்டி வட்டம், எடையூர் சங்கந்தி காவல் துறையில் பணியாற்றக்கூடிய பெரும்பகுதிபேர் சாதி பிரச்சினையை உருவாக்கி வருவதை தடுத்து நிறுத்த வேண்டும் என்பது பற்றி விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

''மானியக் கோரிக்கை எண். 15—காவல் துறை என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 86,35,48,000-இல் ரூ. 100 குறைக்க வேண்டும்''.